**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**<u>ஊடக அறிக்கை</u>**

**<u>பிரதமர் நரேந்திர மோடி  இலங்கை ஜனாதிபதி</u>**

**<u>இடையிலான தொலைபேசி உரையாடல்</u>**

<u>2020 மே 23 ஆம் திகதி இந்திய செய்தி & தகவல் பிரிவால் வெளியிடப்பட்டது</u>

பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுடன் இன்று தொலைபேசி மூலம் கலந்துரையாடினார் . கோவிட்-19 நோய்த் தாக்கம் குறித்தும் , அதனால் இந்தப் பிராந்தியத்தில் ஏற்படக் கூடிய சுகாதாரம் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

நோய்த் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை கையாள , சாத்தியமான அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு இந்தியா வழங்கும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் பிரதமர் உறுதியளித்தார்.

இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு தங்கள் அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றி பிரதமரிடம் , ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார். இந்தியாவின் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர் . இந்திய தனியார் துறையினரால் இலங்கையில் முதலீடுகளையும் பெறுமதி சேர்க்கைகளையும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர் . இலங்கை மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்களுக்கும் பிரதமர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

****

VRRK/KP